பூந்தளிர் அமர் சித்திரககதை

No. 25

குரு இளவரசர்களின் தோற்றம்

மகாபாரதம்-3

Regd. No: R N 36195/84

பூந்தளிர் வழங்கும்

தீபாவளிப் பரிசு

தீபாவளி இதழுடன் உங்களுக்குக் கவர்ச்சியான பரிசு தரப் போகிறது பூந்தளிர்!

தீபாவளித் திருநாளுக்கு மகிழ்ச்சி சேர்க்க நான்கு விதமான முகமூடிகளை உங்களுக்காகவே பூந்தளிர் தயாரித்துள்ளது.

பூந்தளிர் தீபாவளி இதழுடன் மறக்காமல் ஒரு முக மூடியைக் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்.

வழக்கமான கதை கட்டுரை வேடிக்கை விளையாட்டுக்களுடன் தீபாவளி இதழில் பல புதிய அம்சங்களும் பூந்தளிரில் இடம் பெறுகின்றன.

அதே விலை!

CHINTAMANUR-626513



COMICS PDF TIMES


உன் தாத்தாவுக்குத் தாத்தா-
வான பாண்டு, வீரத்தினால்தான்
பெற்ற வெகுமதிகளை எல்லாரு-
க்கும் பகிர்ந்தளித்த பிறகு தன்
மனைவிகளான குந்தி, மாத்ரி-
யுடன் கானகத்துக்குப் போய்
மான் வேட்டையாடி மகிழ்ந்-
திருந்தான்.


இமயத்தின் தென்சரிவிலுள்ள கானகத்தை இதற்குத் தேர்ந்தெடுத்தான்.

தன் வாள், வில், அம்புகளுடன் அக்கானகத்தில் அவர் அலைந்து திரிவதைக்
கண்ட கானகவாசிகள் தங்களிடையே ஒரு தேவ புருஷன்
உலாவுவதாக எண்ணினர்.


ஒரு நாள் வேட்டையின் போது பாண்டு, மான்கள் இரண்டு இணை சேர்ந்து மகிழ்ந்திருக்கும் போது அவற்றில் ஒன்றை அம்பு எய்து கொன்றான்.
உயிர் பிரியும் வேளையில் மான் பாண்டுவிடம்.
நான் மனைவியோடு மகிழ்ந்திருக்கும் போது நீ என்னைக் கொன்றாய். இதே நிலை உனக்கும் ஏற்படும்.
உன் மனைவியை ஆசையோடு நெருங்கும் போது உன் உயிர் பிரியும்.

மானின் சாபத்தைக் கேட்டு அதிர்ச்சியும் துக்கமும் அடைந்த பாண்டு, இல்லற வாழ்க்கையைத் துறக்க முடிவு செய்து தன் மனைவியிடம் கூறினான்.
நான் குடும்ப வாழ்க்கையைக் கைவிட்டு தவ வாழ்க்கையை மேற்கொள்ளப் போகிறேன்
உங்களையும் என் சுற்றத்தாரையும் பிரிந்து, தலையை மழித்துக் கொண்டு திருவோடு ஏந்தி பிச்சை எடுத்து வாழப் போகிறேன்.
ஹஸ்தினாபுரத்திலுள்ள என் தாய்க்கும் பீஷ்மருக்கும் இதைத் தெரிவியுங்கள்.
இதைக் கேட்ட குந்தியும் மாத்ரியும் கூறினார்கள்.
நாதா! எங்களை விட்டுப் போனால் இந்த வினாடியே நாங்கள் உயிர் துறப்போம்.
துறவு கொள்ளப் பல வழிகள் உள்ளன. மனைவிகள் உங்கள் வழித் துணைவிகள் இல்லையா? ஆசைகளை விட்டு நாங்களுமே தவ வாழ்க்கையை மேற்கொள்ளுகிறோம்.
பாண்டு கூறினான்.
அப்படியானால் என் ஆயுட்காலம் வரை நாம் வானப்ரஸ்த ஆசிரமத்தை மேற்கொண்டு வாழுவோம்.

COMICS PDF TIMES

இதனிடையே ஒரு நாள் என் குரு-
நாதர் வியாசர், பசியும் களைப்புமாக
ஹஸ்தினாபுரத்துக்குப் போனார்.
காந்தாரியின் உபசரிப்-
பில் மகிழ்ந்த அவர்,
அவள் விரும்பியபடி,
திருதராஷ்டிரனின் வல்-
லமைக்கு ஒப்பான நூறு
பிள்ளைகள் பிறக்கும்
என்று ஆசிர்வதித்தார்.
குறித்த காலத்தில் காந்தாரி கருவுற்-
றாள். ஆனால் இரண்டு வருஷமாகி-
யும் குழந்தை பிரசவ
மாகவில்லை.
குந்திக்கு யுதிஷ்டிரன் என்ற அழகிய
மகன் பிறந்ததைக் கேள்வி-
யுற்றாள்.
பொறுமையிழந்து பொறாமை-
யும் ஆத்திரமும் கொண்ட
காந்தாரி சூலுற்ற தன் வயிற்-
றில் பலமாக இடித்துக் கொண்
டாள். உடனே இரும்புக் குண்டு
போன்ற ஒரு தசைப் பிண்-
டத்தைப் பிரசவித்தாள்.

COMICS PDF TIMES


பிறகு அதைக் கட்டை விரல் அளவுத் துண்டுகளாக்கி, மருத்துவச்சியைக் கொண்டு அத்துண்டுகளை, நெய்ஜாடிகளில் போடும்படி செய்தார். இந்நிலையில் காந்தாரி நினைக்கிறாள்.
எனக்கு நூறு பிள்ளைகள் பிறப்பார்கள் சந்தேகமில்லை. வரமளித்தவர் மாமுனிவர்.
நூறு பிள்ளைகளுக்குத் தங்கையாக ஒரு பெண்ணும் பிறக்குமானால் மிக்க மகிழ்வேன்.
நான் கற்புடையவளானால் எனக்கு ஒரு மகள் பிறக்கட்டும்.
அப்போது என் குருநாதர் அவளிடம் கூறினார்.
இதோ உன் நூறு பிள்ளைகள்
ஆனாலும் அதில் ஒரு துண்டு மிஞ்சியுள்ளது. நீ விரும்பியபடி இது உன் மகளாகும்

COMICS PDF TIMES


பீதியடைந்த திருதராஷ்டிரன் பீஷ்மர், விதுரர் மற்றும் அந்தணர்களை அழைத்துக் கூறினார்
முதலில் பிறந்த இளவரசன் யுதிஷ்டி-ரனே முறைப்படி இப்பூமியை ஆளுவ-தற்கு உரிமையு-டையவன்.
ஆனால் அவனுக்குப் பின் இந்த என் மகன் மன்ன-னாவானா? அவன் வருங்-காலம் எப்படி என்ற உண்மையைக் கூறு-ங்கள்.
யோ..வ்..வ்..
திருதராஷ்டிரன் பேசிக் கொண்டிருக்கும் போதே வனவிலங்குகளின் ஊளை சத்தம் எங்கும் நிறைந்தது. விதுரன் கூறினான்.
இய்..யோ..ஓ..
இந்தச் சகுனங்க-ளிலிருந்து, உங்கள் மூத்த மகனால் உங்கள் வம்சமும் தேசமும் அழியும் என்று தெரிகிறது.

உன் இனத்தின் நலனுக்காக அவனைக் கைவிடு.
உனக்கு 99 பிள்ளைகள் இருக்கிறார்கள். உன் வம்சத்தின், தேசத்தின் க்ஷேமத்துக்காக இந்த பிள்ளையைக் கை விடு.
ஒரு குடும்ப நலனுக்காகத் தனி ஒருவனையும், ஒரு கிராம நலனுக்காக ஒரு குடும்பத்தையும், தேசத்துக்காக ஒரு கிராமத்தையும் துறக்கலாம் என்று கூறப்படுகிறது.
ஆனால் மகன் மீதுள்ள பாசத்தினால் திருதராஷ்டிரன் இதை ஏற்கவில்லை...
...துர்யோதனன் பிறந்த பின், திருதராஷ்டிரனுக்கும் வைசிய குலப்பெண்ணுக்கும் யுயுத்ஸு என்ற மகன் பிறந்தான்.
இதன் பிறகு காந்தாரியின் 99 மகன்களும் துச்சலா என்ற மகளும் பிறந்தனர்.


முனிவரே! திருதராஷ்டிரனின் பிள்ளைகள் பிறந்த விவரத்தை விளக்கமாகக் கூறினீர்கள்.
குந்திக்கு யுதிஷ்டிரன் பிறந்ததாகவும் கூறினீர்கள். பாண்டுவிற்கு மானின் சாபம் இருக்கும்போது, இது எப்படி சாத்தியம்? என் மூதாதையர்களான அர்ஜுனனும் அவர் சகோதரர்களும் எப்படிப் பிறந்தார்கள் என்பதையும் கூறுங்கள்.
உலக இன்பங்களைத் துறந்து, பாண்டுவும் அவன் மனைவிகளும் சைத்ரரதா மலைப் பகுதியில் அலைந்தபடி இமயத்திலுள்ள கந்தமாதனத்துக்கு வந்தனர்.
கந்தமாதனத்திலிருந்து, இந்திரத்யும்ன ஏரிக்குப் பயணப்பட்டு, மலைகளைக் கடந்து ஷடச்ருங்க மலைப் பகுதிக்கு வந்து தங்கினார்கள்.

வடசிருங்க மலையிலுள்ள முனிவர்களின் அன்புக்குப் பாத்திரமானான் பாண்டு. ஒரு சமயம் அவர்கள் பிரும்மாவைக் காணப் புறப்பட்டபோது பாண்டு தன் மனைவிகளுடன் கிளம்பினான்.
இம்மலைக்கு அப்பாலுள்ள மலைகள் கடக்க முடியாதவை. இந்த அரசகுமாரிகளால் எப்படி அம்மலை முடிகளில் ஏற முடியும்? எங்களோடு வரவேண்டாம்.
பாண்டு கூறினான்.
அப்படியானால் என் பிறப்புப்படி இதே நிலையில் எனக்குக் குழந்தைகள் உண்டா என்பதைக் கூறுங்கள்.
ரிஷிகள் கூறினர்.
உன் வம்சம் தழைக்க இருப்பதை நாங்கள் ஞானத்தால் அறிகிறோம். விதியின் நியதி எப்படியோ? முயன்றால் முடியாதது கிடையாது.
செய்ய வேண்டியதை முறைப்படி செய்- பலன் கிடைக்கும்.
ரிஷிகள் கூறியதைக் கேட்ட பாண்டு- மானின் சாபத்தை மறக்காத பாண்டு- குந்தியிடம் கூறினான்.
தங்களால் வம்ச விருத்தி செய்ய இயலாத போது வேறு நபர்களைக் கொண்டு குழந்தைகளை அடையலாம் என்று மனு கூறுகிறார்

ஆகவே, பிரம்மத்தை அறிந்த ஒருவர்மூலமாக எனக்கு நீ குழந்தைகளைக் கொடு.
குந்தி கூறினள்.
மனதினால் கூட நான் உங்களையன்றி வேறு யாரையும் நினைத்ததில்லை. உங்களை மிஞ்சும் ஆண்மகன் யாரிருக்கிறார்கள்?
நான் உங்கள் தர்ம பத்தினி. நீங்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். பிறகு நானும் உங்களோடு விண்ணுலகம் வருவேன்.
நல்லொழுக்கம் பற்றி நன்குணர்ந்த பாண்டு கூறினன்.
முன்னாளில் பெண்கள் தங்கள் விருப்பப்படி சுதந்திரமாக வாழ்ந்தார்கள். ஒரு மனிதனிடம் கட்டுப்பட்டிருக்கவில்லை.
இப்பழக்கம் சரி என்றே கருதப்பட்டது. தவிர இது அவர்களுக்குச் சாசுவதமான நன்மையாக இருந்தது.
இன்றையக் கட்டுப்பாடுகளைப் பெண்களின் மீது புகுத்தியது. உத்தாலக ரிஷியின் மகன் ஸ்வேதகேது தான்.

குந்தி குரு வம்சம் அழியாதிருக்க கிருஷ்ண த்வைபாயனர் என்ன செய்தார் என்பதை நீ அறிவாயல்லவா? ஆகவே நான் கூறிய படி எது சரியோ அதைச் செய்.
இதன் பிறகு குந்தி, துர்வாச மகரிஷி தனக்கு உபதேசித்த மந்திரத்தைப் பற்றிக் கூறினாள்.
அந்த மந்திரத்தின் மகிமையால் எந்தக் கடவுளின் அருளாலும் நாம் குழந்தையை அடையமுடியும். கூறுங்கள் எந்தக் கடவுளை நான் அழைக்க?
பாண்டு கூறினான்
தாமதமின்றி எமதர்மனைக் கூப்பிடு. நேர்மை தவறாத கடவுளான அவர் நம் செயலைத் தூய்மையாக ஏற்பார். அவர்மூலம் பிறக்கும் மகன் குரு வம்சத்துக்குப் புகழ் சேர்ப்பான்.
குந்தி மந்திரத்தைத் தியானிக்க அதனால் வசீகரிக்கப்பட்டான்.
நேர்மையின் அதி தேவதையான எமதர்மன் அவள் அழைப்பை ஏற்று வந்தான்.
அவன் அருளால் குந்தி அற்புதமானதோர் மகனை அடைந்தாள். அவன் பிறந்ததும் அசரீரி ஒலித்தது.
பாண்டுவின் மூத்தமகன் யுதிஷ்டிரன் என்று அழைக்கப்படுவான். நேர்மைக்கும் சத்தியத்துக்கும் எடுத்துக்காட்டாக மூவுலகும் புகழும் மன்னனாக விளங்குவான்.

* दैवे पुरुषकारे च लोकोऽयं हि प्रतिष्ठितः
तत्र दैवं तु विधिना कालयुक्तेन लभ्यते।

நீண்ட தவத்துக்குப் பிறகு இந்திரன் பாண்டுவின் முன் தோன்றி....
விரோதிகளை அழிப்பவனும், நேர்மையின் தோழனுமான ஒரு மகனை உனக்கு அளிக்கிறேன். மூவுலகும் புகழும் கீர்த்தியோடு விளங்குவான் அவன்.
பாண்டு குந்தியிடம் கூறினான்.
தேவதேவன் மகிழ்ச்சியடைந்தான். அழகான, குணவானை, அறிவாளியான, கலைகளில் வல்லவனை, போரில் வெல்ல முடியாதவனை ஒரு மகனை விரைவில் நீ அடையப் போகிறாய்.
க்ஷத்திரியர்களின் புகழ் பரப்பும் ஒரு மகனைத் தருமாறு இந்திரனை வேண்டு.
மன்னவனே! குந்தியின் மந்திரத்தினால் பிரார்த்திக்கப்பட்ட இந்திரன் அவள் முன் தோன்றினான். அவன் அருளால் உன் தாத்தாவுக்குத் தாத்தாவான அர்ஜுனன் பிறந்தான்.

குழந்தை பிறந்ததும் குந்தியை நோக்கிக்
கணீரென்ற உரத்த குரலில், விண்ணும்
மண்ணும் எதிரொலிக்க அசரீரி
எழுந்தது.
இக்குழந்தை
யால் நீ
புகழ்
பெறுவாய்.
வல்லமையில்
இவன் திருமால்,
சிவன், பரசுராம-
ருக்கு நிகரா-
வான்.
ஒரு நாள் இவன்
பராக்கிரமத்தினால்
காந்தவ வனம்
எரிந்து அக்னியைத்
திருப்தியடையச்
செய்யும்.
சிவபிரானின் பாரா
ட்டைப் பெற்று,
அவரிடமிருந்து
பாசுபதாஸ்திர-
த்தை அடைவான்.
இந்திரனின் ஆணைப்
படி தேவர்களின்
விரோதியான நிவா
த கவசர்களை அழிப்
பான்.
சகலவிதமான
பாணங்களின்
ரகசியங்களையும்
அறிந்து குரு வம்சத்
தின் புகழ் பரப்பு
வான்.



COMICS PDF TIMES

மேலும் குழந்தைகளை விரும்பிய பாண்டு குந்தியிடம் கூற, அவள் கூறினாள்.
ஆபத்துக் காலமானாலும் கூட நான்காவது குழந்தை வேண்டாம் என்று மேலோர் கருதுகிறார்கள்.
சாஸ்திரங்கள் கூறுவதை அறிந்த நீங்கள் ஆர்வங் காரணமாக ஏன் என்னைத் தவறான வழியில் போகச் சொல்கிறீர்கள்?
முனிசிரேஷ்டரே! அப்படியானால் என் மூதாதையர்களான நகுல சகதேவர்கள் எப்படிப் பிறந்தார்கள்.
* नातश्चतुर्थं प्रसवमापत्स्वपि वदन्त्युत।

அவர்கள் பாண்டுவின் இரண்டாவது மனைவி சால்யனின் சகோதரி மாத்ரிக்குப் பிறந்தார்கள்.
குந்திக்கும் காந்தாரிக்கும் குழந்தைகள் பிறந்த பிறகு மாத்ரி பாண்டுவிடம் கூறினள்.
குந்தியிடம் தாங்கள் காட்டும் அன்பு என்னை வேதனைப் படுத்துகிறது. நான் அவளுக்கு அடுத்தபடிதானே.
காந்தாரி நூறு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டது கூட என்னை ஆதங்கப்பட வைக்கவில்லை.
ஆனால் குந்தியைப் போல நானும் உங்கள் மனைவி - நான் மலடியாக இருப்பதே என்னை வேதனைப்பட வைக்கிறது.
குந்தியுடைய மந்திரத்தினால் எனக்குப் பலன் உண்டானால் அது உங்களுக்கும்தானே.


உங்களை அன்னைப் பெறுவதில் அவள் எனக்குப் போட்டியாக இருப்பதால் அவளிடம் நான் போய் உதவி கேட்பதில் அர்த்தமில்லை.
என் பேச்சை நீங்கள் அங்கீகரிப்பதானால் எனக்காகக் குந்தியிடம் பேசிப் பாருங்கள்.
பாண்டு கூறினான்
இந்த எண்ணம் எனக்குமே உண்டு. உன் எண்ணம் எனக்குத் தெரியாததினாலேதான் இதை நான் வெளியிடவில்லை.
இப்போது உன் எண்ணம் புரிந்தது. குந்தியைக் கேட்கிறேன். அவள் நிச்சயம் சம்மதிப்பாள்.
பாண்டு குந்தியிடம் போய்க் கூறினான்.
எனவம்சத்தைப் பெருக்கவும், உன் புகழ் ஓங்கவும், குந்தி, உனக்கு கஷ்டமானாலும் மாத்ரியையும் தாய்மை அடையச் செய்.
பாண்டுவின் வேண்டுகோளை குந்தி ஏற்றாள். மாத்ரி அஸ்வினிகுமாரர்களின் கருணையினால் நகுல சகதேவர்களான இரட்டையர்களுக்குத் தாயானாள்.

குழந்தைகள் பிறந்ததும் விண்ணிலே அசரீரி ஒலித்தது
அழகிலும் வல்லமையிலும் இவர்கள் எல்லாருக்கும் மேலாக விளங்குவார்கள்.
இதன் பிறகு பாண்டு குந்தியிடம் மீண்டும் மாதர்க்காக வேண்டிக் கொண்டான். குந்தி கூறினாள்.
ஒருமுறை மந்திரத்தை உச்சரித்து இரண்டு குழந்தைகளை அடைந்து விட்டாள்.
இப்படி இரட்டையர்களை வேண்டி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள எனக்குத் தெரியாமல் போயிற்று.
அவளுடைய வஞ்சகச் செயலை எண்ணிக் கவலைப் படுகிறேன். ஆகவே மேலும் என்னை உதவச் சொல்லாதீர்கள்.
பாண்டு அந்த விஷயத்தை அதோடு நிறுத்திக் கொண்டான். ஷட்சிருங்காசிரம ரிஷிகள் ஐந்து குழந்தைகளுக்கும் முறைப்படி நாமகரணச் சடங்குகளைச் செய்து யுதிஷ்டிரன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகதேவன் என்று பெயரிட்டார்கள்.

ஒரு நாள் - வசந்தத்தின் வனப்பும் எழிலும் ஜீவராசிகளிடையே சலனத்தை ஏற்படுத்த, மாத்ரியுடன் பாண்டு, கானகத்தில் உலாவிக் கொண்டிருந்தான்.



அந்த எழில் சூழலில் மாத்ரியின் அழகு பாண்டுவைக் கவர்ந்தது. பலவந்தமாக அவளுடன் இணைந்தான். விதியின் பிடிக்குள் விழுந்தான்.
உயிரற்ற பாண்டுவின் உடலைத் தழுவிக் கொண்டு மாத்ரி கதறினாள். அவள் அழுகை குந்தியையும் குழந்தைகளையும் அங்கே வரச் செய்தது.
துக்கத்தோடு மாத்ரி கதறினாள்.
குழந்தைகளை அங்கேயே விட்டு விட்டு நீ மட்டும் வா.
குந்தி குழந்தைகளை அங்கேயே விட்டு விட்டு மாத்ரியிடம் ஓடி வந்தாள்.
நான் மோசம் போனேன்!

யாகு மாத்ரியிடம் கூறினாள்.
இந்த வீர புருஷனை இத்தனை காலமும் கட்டிக் காத்து வந்தேனே. மானின் சாபத்தை இவர் எப்படி மறந்தார்?
மாத்ரி! நீ அவரைக் காப்பாற்றியிருக்க வேண்டாமா? இந்தத் தனிமையில் அவர் எப்படித் தன்னை இழந்தார்?
எப்போதும் சாபத்தின் நினைவாகவே இருக்கும் அவர், உன்னோடு இருக்கும் போது எப்படி எழுச்சியுற்றார்?

மாத்ரி கூறினாள்.
அருமைச் சோதரி! என் மறுப்புகள் ஏதும் பயன் தரவில்லை.
குந்தி கூறினாள்.
மாத்ரி என்னை விட நீ பாக்யசாலி. ஏனென்றால் நம் கணவரின் முகத்தில் அந்த மகிழ்ச்சியைப் பார்த்தவள் நீ.
ஆனால் நான் அவரோடு மேலுல-கம் போகிறேன். மூத்தாளின் உரிமையோடு.
எழுந்திரு மாத்ரி. நம் குழந்தைகளைக் காப்பாற்று.


அருமைச் சோதரி!
நான் வாழ்ந்தால்,
உன் குழந்தைகளை
என் குழந்தைகளைப்
போல என்னால்
வளர்க்க முடியாது.
ஆனால் நீ
எல்லாக் குழந்-
தைகளையும் சம
மாகப் பாவித்து
வளர்ப்பாய்
அதில் ஐயமே
இல்லை.
மன்னனின்
மரணத்துக்கு இந்த
என் உடல்தான் காரண-
மாக இருந்தது.
ஆகவே அவரோடு
சிதையில் இந்த உடல்
தான் போக
வேண்டும்.
இந்த முடிவோடு
மாத்ரி கணவனின்
சிதையில் உடன்
கட்டை ஏறினாள்.

ஷடசிருங்காசிரம ரிஷிகள் பாண்டுவின் மறைவுக்குப் பிறகு கலந்து பேசினார்கள்.
மன்னன் பாண்டு, நம்முடன் தவ வாழ்க்கை மேற்கொள்ள இங்கு வந்து தங்கியதினால், அவனுடைய மனைவியையும் குழந்தைகளையும் அவன் ராஜ்யத்தில் கொண்டு சேர்ப்பது நம் கடமை.
பாண்டு குமாரர்களை திருதராஷ்டிரன், பீஷ்மர் இவர்களிடம் ஒப்படைக்க குந்தியுடனும் பாண்டு மாத்ரியின் அஸ்தியுடனும் ரிஷிகள் ஹஸ்தினபுரம் நோக்கிக் கிளம்பினார்கள்.
வைசம்பாயனர் கூறியபடி, வியாச மகரிஷியின் இறவா இதிகாசமான மகாபாரதத்தின் மூன்றாம் பாகம் முடிவடைந்தது.

அடுத்த

பூந்தளிர் அமர்
சித்திரக்கதை

விக்ரமாதித்தன்

அக்டோபர் 25ந் தேதி
எல்லாக்
கடைகளிலும்
கிடைக்கும்



EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS

AMAR CHITRA KATHA

11 KRISHNA
12 SHAKUNTALA
13 THE PANDAVA PRINCES
14 SAVITRI
15 RAMA
16 NALA DAMAYANTI
17 HARISCHANDRA
18 THE SONS OF RAMA
19 HANUMAN
20 MAHABHARATA
21 CHANAKYA
22 BUDDHA
23 SHIVAJI
24 RANA PRATAP
25 PRITHVIRAJ CHAUHAN
26 KARNA
27 KACHA
28 VIKRAMADITYA
29 SHIVA PARVATI
30 VASAVADATTA
31 SUDAMA
32 GURU GOBIND SINGH
33 HARSHA
34 BHEESHMA
35 ABHIMANYU
36 MIRABAI
37 ASHOKA
38 PRAHLAD
39 PANCHATANTRA I
40 TANAJI
41 CHHATRASAL
42 PARASHURAMA
43 BANDA BAHADUR
44 PADMINI
45 JATAKA TALES I
46 VALMIKI
47 GURU NANAK
48 TARABAI
49 RANJIT SINGH
50 RAM SHASTRI
51 RANI OF JHANSI
52 ULOOPI
53 BAJI RAO I
54 CHAND BIBI
55 KABIR
56 SHER SHAH
57 DRONA
58 SURYA
59 URVASHI
60 ADI SHANKARA
61 GHATOTKACHA
62 TULSIDAS
63 SUKANYA
64 DURGADAS
65 ANIRUDDHA
66 ZARATHUSHTRA
67 THE LORD OF LANKA
68 TUKARAM
69 AGASTYA
70 VASANTASENA
71 INDRA & SHACHI
72 DRAUPADI
73 SUBHADRA
74 AHILYABAI HOLKAR
75 TANSEN
76 SUNDARI
77 SUBHAS CHANDRA BOSE
78 SHRIDATTA
79 JATAKA TALES II
80 VISHWAMITRA
81 THE SYAMANTAKA GEM
82 MAHAVIRA
83 VIKRAMADITYA'S THRONE
84 BAPPA RAWAL
85 AYYAPPAN
86 ANANDA MATH
87 BIRBAL THE JUST
88 GANGA
89 GANESHA
90 CHAITANYA MAHAPRABHU
91 HITOPADESHA I
92 SAKSHI GOPAL
93 KANNAGI
94 NARSINH MEHTA
95 JASMA OF THE ODES
96 SHARAN KAUR
97 CHANDRAHASA
98 PUNDALIK & SAKHU
99 RAJ SINGH
100 PURUSHOTTAM DEV & PADMAVATI
101 VALI
102 NAGANANDA
103 MALAVIKA
104 RANI DURGAVATI
105 DASHARATHA
106 RANA SANGA
107 PRADYUMNA
108 VIDYASAGAR
109 TACHCHOLI OTHENAN
110 SULTANA RAZIA

Acquaint your children with their cultural heritage

111 SATI & SHIVA
112 KRISHNA & RUKMINI
113 RAJA BHOJA
114 GURU TEGH BAHADUR
115 PAREEKSHIT
116 KADAMBARI
117 DHRUVA & ASHTAVAKRA
118 KING KUSHA
119 RAJA RAJA CHOLA
120 DAYANANDA
121 VEER DHAVAL
122 ANCESTORS OF RAMA
123 EKANATH
124 SATWANT KAUR
125 UDAYANA
126 JATAKA TALES III
127 THE GITA
128 VEER HAMMIR
129 MALATI & MADHAVA
130 GARUDA
131 BIRBAL THE WISE
132 RANAK DEVI
133 MARYADA RAMA
134 BABUR
135 DEVI CHOUDHURANI
136 RABINDRANATH TAGORE
137 SOORDAS
138 PANCHATANTRA II
139 PRINCE HRITADHWAJA
140 HUMAYUN
141 PRABHAVATI
142 CHANDRA SHEKHAR AZAD
143 A BAG OF GOLD COINS
144 PURANDRA DASA
145 BHANUMATI
146 VIVEKANANDA
147 KRISHNA & JARASANDHA
148 NOOR JAHAN
149 ELEPHANTA
150 TALES OF NARADA
151 KRISHNADEVA RAYA
152 BIRBAL THE WITTY
153 MADHVACHARYA
154 CHANDRA GUPTA MAURYA
155 JNANESHWAR
156 BAGHA JATIN
157 MANONMANI
158 ANGULIMALA
159 THE TIGER AND THE WOODPECKER
160 TALES OF VISHNU
161 AMRAPALI
162 YAYATI
163 PANCHATANTRA III
164 TALES OF SHIVA
165 KING SHALIVAHANA
166 THE RANI OF KITTUR
167 KRISHNA & NARAKASURA
168 THE MAGIC GROVE
169 LACHIT BARPHUKAN
170 INDRA AND VRITRA
171 AMAR SINGH RATHOR
172 KRISHNA & THE FALSE VASUDEVA
173 KOCHUNNI
174 TALES OF YUDHISHTHIRA
175 HARI SINGH NALWA
176 TALES OF DURGA
177 KRISHNA AND SHISHUPALA
178 RAMAN OF TENALI
179 PAURAVA AND ALEXANDER
180 INDRA AND SHIBIRAJA
181 GURU HAR GOBIND
182 THE BATTLE FOR SRINAGAR
183 RANA KUMBHA
184 ARUNI AND UTTANKA
185 HITOPADESHA II
186 TIRUPPAN & KANAKADASA
187 TIPU SULTAN
188 DR AMBEDKAR
189 THUGSEN
190 KANNAPPA
191 THE KING IN A PARROT'S BODY
192 RANADHIRA
193 KAPALA KUNDALA
194 GOPAL & THE COWHERD
195 JATAKA TALES IV
196 HOTHAL
197 THE RAINBOW PRINCE
198 TALES OF ARJUNA
199 CHANDRALALAT
200 AKBAR

Available at
PAI & CO.
Ernakulam, Calicut, Madras, Trivandrum
And all other Leading Book Sellers

MAHABHARATA-3

© India Book House Education Trust 1980 The Tamil Edition published by arrangement with India Book House Education Trust, Rusi Mansion, 29, Nathalal Parekh Marg, Bombay - 400 039.

Editor: Anant Pai Script: Kamala Chandrakant & T. M. P. Nedungadi
Artworks: Dilip Kadam

Poontalir
TN/MS (c) 744
1985 September 10 AMAR CHITRA KATHA Price : Rs. 1.50

உங்கள் குழந்தைகளின் மனவளர்ச்சிக்கும்
அறிவு முதிர்ச்சிக்கும் எந்த மருந்தும்
தரவேண்டாம்

பூந்தளிர்

அளிக்கும் புதுமையான
விருந்தே போதும்

ஒவ்வொரு மாதமும் 1—16 தேதிகளில் உங்கள்
செல்வங்களைக் குதூகலப்படுத்த
வருகின்றது
விலை ரூ. 2 தான்
ஆண்டு சந்தா
ரூபாய் 45